Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :184 வைகாசி 18ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 31 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



15

எவ்வகையான போக்குவரத்து முறையினைப் பாவிப்பினும் பயணத்தின் முடிவில் கைகளை முறைப்படி கழுவுவோம்

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

# வடக்கு, கிழக்கு இணைப்பும் தனிநாட்டுக் கோரிக்கையே!

## அதையும் கைவிடுமாறே கேட்கின்றோம் என்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



**யாழ்ப்பாணம், மே 31**

**வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரு மாகாணம் ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் தனிநாட்டுக்கான கோரிக்கைதான். அதனையும் கைவிடுமாறே நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கேட்கின்றோம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

02

# ஆயுதப் போராட்டத்தை நாம் எதிர்க்கவில்லை

*சுமந்திரன் முன்னிலையில் சம்பந்தன் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், மே 31

ஆயுதப் போராட்டம் தோற்றுப் போக அனுமதிக்க வேண்டாம் என்று அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்தியிருந்தது. ஆயுதப் போராட்டத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்க்க

12

# மக்கள் பிரதிநிதிகளை ஓரம்கட்டுகின்றாரா யாழ். அரச அதிபர்?

யாழ்ப்பாணம், மே 31

டெங்கு ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகளில் பிரதேச சபைகளுக்குப் பெரும் பொறுப்பு இருக்கும் நிலையில், மக்கள் பிரதிநிதிகளான பிரதேச சபை தவிசாளர்களை அழைக்காமல் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பான கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.

'டெங்கு ஒழிப்புத் தொடர்பில் எமக்குப் பெரும் பொறுப்பு உள்ளது. ஆனால் எம்மை அழைக்காமல் மாவட்டச் செயலர் மகேசன் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்' என்று வலி.

02

# தொண்டமானின் அமைச்சுக்கள் மஹிந்தவுக்கு

கொழும்பு, மே 31

அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட்டிருந்த சமூக வலுவூட்டல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவியை பொதுத்தேர்தல் முடிவடையும்வரை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் கொண்டுவர தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02

# அரசை மிரட்டி தீர்வு பெற முயற்சிப்பது பயனற்றது!

*சம்பந்தனின் கருத்துக்கு அரசு இப்படிப் பதில்*

கொழும்பு, மே 31

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவையோ அல்லது அவர் தலைமையிலான அரசையோ வெருட்டி - மிரட்டித் தீர்வு பெற முயற்சிப்பது பயனற்றது. இதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு ராஜபக்ஷ அரசின் பேச்சாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கை அரசை மீறி சர்வதேசம் எதையும் செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

02

# முல்லைத்தீவில் கடற்படையினர் இருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மே 31

முல்லைத்தீவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கடற்படையினர் இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்

12

# விபத்தில் சிக்கியவர் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 31

பளைப் பகுதியில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த முதியவர், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

02

# கைபேசி அழைப்பால் 90,000 ரூபா 'அபேஸ்'

## யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 31


கைத்தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட இனந்தெரியாதவர்கள் நூதனமான முறையில் 90 ஆயிரம் ரூபாவை மீண்டுமொருமுறை மோசடி செய்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம், குருநகரில் உள்ள ஒருவரின் கைபேசிக்கு நேற்றுக் காலை அழைப்பொன்று வந்தது. அதில் பேசியவர்கள் தங்களை தொலைபேசி நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளனர். உங்களுக்கு 25 லட்சம் ரூபா பரிசு விழுந்துள்ளது என்று தெரிவித்தனர்.

"உங்களின் 'சிம்' முன்னர் இன்னொரு நபரின் பெயரில்(அவரது பெயரையும் சரியாகக்கூறி) இருந்தது, இப்போது அது உங்களின் பெயரில் மாற்

02

# கொரோனா 1,613



கொழும்பு, மே 31

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 55 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயி

02

# வடமராட்சி வெடிப்பு: சூத்திரதாரி கைதாம்

யாழ்ப்பாணம், மே 31

வல்லிபுரம் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சக்தி குறைந்த வெடிப்புத் தாக்குதலில் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் என்று அடையாளப்படுத்தப்பட்டு தேடப்பட்டு வந்தவர் நேற்றையதினம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

02

# சிப்பாய்க்கு கொரோனா! குடும்பங்கள் தனிமைப்படுத்தல்!!

கொழும்பு, மே 31
இராணுவச் சிப்பாய் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளதைத் தொடர்ந்து ஹொரணையில் பல குடும்பங்களைத் தனிமைப்படுத்துமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.
ஹொரணையிலுள்ள பகுதியொன்றுக்கு இராணுவச் சிப்பாய் சில நாள்களுக்கு முன்னர் சென்றுவந்துள்ளார் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இராணுவச் சிப்பாயுடன் நேரடித் தொடர்பைப் பேணியவர்களில் 14 குடும்பங்கள் நேற்றிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, இந்தச் செய்தி நேற்றுப் பரவியதும் ஹொரணையிலுள்ள வர்த்தக நிலையங்கள் உடனடியாக மூடப்பட்டுள்ளன.
(ஒ,5,22)

## வடக்கு....

சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
'தமிழ்த் தலைவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை. அதனைக் கைவிடவேண்டும் என்று நீங்கள் (மஹிந்த) அண்மையில் தெரிவித்திருந்தீர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டுவிட்டோம் என்று பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது. இப்போதும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கும் தமிழ்த் தலைவர்கள் என்று யாரைக் குறிப்பிடுகின்றீர்கள்' என்று பிரதமர் மஹிந்தவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு கிழக்கு இணைந்த ஒரு தனிநாட்டுக்காகத்தான் ஜனநாயக வழியிலும் பின்னர் ஆயுத ரீதியாகவும் தமிழர்கள் போராடினார்கள். விடுதலைப் புலிகள் இதற்கு தமிழீழம் என்று பெயர் சூட்டினார்கள். இது தனிநாட்டுக்கு அவர்கள் சூட்டிய பெயர்.
விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமது ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வை கோருகின்றது. அவர்கள் வடக்கு கிழக்கு இணைப்புக்காகத்தான் சமஷ்டியைக் கோருகின்றார்கள். கூட்டமைப்பின் இந்தக் கோரிக்கையும் தனிநாட்டுக்குரியதுதான். வடக்கு கிழக்கு இணைப்பு என்பதே தனிநாடுதான். இந்தக் கோரிக்கையிலிருந்து விடுபட்டு வருமாறுதான் நாம் கூட்டமைப்பைக் கோருகின்றோம்.
கூட்டமைப்பு வெறுமனே தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு விட்டோம் என்று வாயால் சொல்வதில் அர்த்தமில்லை. அவர்கள் வடக்கு ,கிழக்கு இணைப்புக் கோரிக்கையை இன்னமும் கைவிடவில்லை. பின்னர் எவ்வாறு தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடவில்லை என்று சொல்ல முடியும். சமஷ்டித் தீர்வுதான் வேண்டும் என்று அவர்கள் பிடிவாதமாக இருக்கின்றார்கள். அதனைக் கைவிட்டு வருமாறே நாம் சொல்கின்றோம்.
புதிய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்புத் தொடர்பாக, தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் பேசுவோம் என்று கூட்டமைப்பை அண்மையில் சந்தித்தபோது உறுதியளித்துள்ளேன். எனவே புதிய அரசில், எல்லோரும் இலங்கை மக்கள் என்ற அடிப்படையிலேயே தீர்வை வழங்குவோம். மலையகத் தமிழர், முஸ்லிம்கள், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் என்று பிரித்துப் பார்த்து தீர்வை வழங்கமாட்டோம், என்றார். (ஒ,5,22)

## விபத்தில்...

புதுக்குடியிருப்பு தேவிபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் துரைவீரசிங்கம் (வயது-72) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த 22ஆம் திகதி முல்லைத்தீவிலிருந்து, பளையில் உள்ளதனது சகோதரியைப்பார்க்க முச்சக்கரவண்டியின் பின் ஆசனத்திலிருந்து பயணித்துள்ளார். பளைப் பகுதியில் நாய் குறுக்கே சென்றதால், முச்சக்கரவண்டி அருகிலிருந்த மின்கம்பத்துடன் மோதுண்டது. விபத்தில் மயக்கமடைந்த அவர் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.
அங்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.
(ஒ,5,26)

## தொண்டமா...

இதன்படி, நாளை திங்கட்கிழமை மேற்படி அமைச்சு பதவியை மஹிந்த பதவிப்பிரமாணத்துடன் பொறுப்பேற்கவுள்ளார். சமூக வலுவூட்டல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த ஆறுமுகன் தொண்டமான் அண்மையில் மாரடைப்பால் உயிரிழந்திருந்தார். இன்று அவரது இறுதிக் கிரியை இடம்பெறவுள்ளது. இந்த நிலையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் அந்த அமைச்சுப் பதவிகள் கொண்டுவரப்படவுள்ளது. (பு)

## கொரோனா...

ரத்து 613 ஆக அதிகரித்துள்ளது.
இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமான 775 பேர் அடங்குகின்றனர். இதில் 739 கடற்படையினர் உள்ளடங்குகின்றனர்.
கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 822 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 781 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். அத்துடன் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.
(ஒ,5,22)

## ஓரம்...

கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஸ் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கு தாக்கம் அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில், டெங்கு கட்டுப்பாட்டுக் கூட்டம் நடைபெற்றது.
இந்தக் கூட்டத்துக்கு பிரதேச சபைகளின் செயலர்கள் அழைக்கப்பட்டபோதும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் அழைக்கப்படவில்லை. பிரதேச செயலர்கள், பொலிஸார் கலந்து கொண்டனர்.
'யாழ்ப்பாணத்தில் மீண்டும் தலைதூக்கும் டெங்கைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மாவட்டச் செயலரின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் இடம்பெற்றதை ஊடகங்கள் ஊடாகவே அறிந்தோம். டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பெரும் பணியாற்ற வேண்டிய கடப்பாடு உள்ளூராட்சி மன்றங்களுக்கு உண்டு. அந்தப் பணியை முன்னெடுக்க மக்கள் சபையின் ஒப்புதல் தேவை. ஆனால் எந்தவொரு சபையின் தவிசாளருக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை. கடந்த காலங்களில் இத்தகைய கூட்டங்களுக்கு தவிசாளர்கள் அழைக்கப்பட்ட நிலையில் தற்போது அழைக்கப்படாதமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. மாவட்டச் செயலகம் எம்மை வேண்டுமென்றே புறக்கணிப்பதாகவே கருதுகின்றோம்' என்று பிரதேச சபைத் தவிசாளர் நிரோஸ் குறிப்பிட்டார்.
'கடந்த காலங்களைப் போன்றே கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது. உள்ளூராட்சி சபைகளில் தவிசாளர்கள் அழைக்கப்படாத போதிலும் செயலர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்' என்று மாவட்டச்செயலர் மகேசன் பதிலளித்தார்.
'கடந்த காலங்களில் தவிசாளர்கள் அழைக்கப்பட்டே கூட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலர் சொல்வது தவறு' என்று வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் ஆகியோர் தெரிவித்தனர்.
(ஒ,5,105)

## அரசை...

'சர்வதேசம் எங்களைக் கைவிடாது என்று நம்புகின்றோம். தமிழருக்கு ஒரு தீர்வு கிடைப்பதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் தடுக்க முடியாது. எவராலும் தடுக்க முடியாது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரவணைத்துப் பயணிக்கவே அரசு விரும்புகின்றது. ஆனால், கூட்டமைப்பு பழைய நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது. அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளைத் தற்காலத்துக்கு ஏற்ற மாதிரி மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். புதிய வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அரசுடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். தமிழர்களின் முக்கிய பிரச்சினைகளுக்கு இந்த அரசு தீர்வு வழங்கும். ஆனால், நாட்டிலுள்ள அனைவரும் ஏற்கும் தீர்வையே வழங்குவோம். தமிழீழ விடுதலைப்புலிகளின் பாணியில் மிரட்டித் தீர்வைக் கேட்பதைக் கூட்டமைப்பினர் கைவிட வேண்டும். தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை எப்படி எந்தவேளையில் வழங்குவது என்று அரசுக்குத் தெரியும், என்றார். (ஒ,5,22)

## வடமராட்சி...

பிரதான சந்தேகநபர் மணல் கடத்தலில் ஈடுபடுபவர் எனவும், சில மாதங்களுக்கு முன்னர் பொலிஸார் மீது மிளகாய்த்தூள் தாக்குதல் நடத்தியிருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் பாதுகாப்புத் தரப்பினர் தேடுதல் நடத்தினர். மேற்படி சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்றபோது அவர் அங்கு இல்லை. இதனையடுத்து அவரைத் தீவிரமாகத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.
இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றைய தினம் அவரைக் கைது செய்துள்ளனர். அவரது அலைபேசி அசைவுகளை வைத்தே கைது செய்ததாகக் கூறப்படுகின்றது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தமது விசாரணைகளின் பின்னர் நேற்று இரவு 10 மணியளவில், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் சந்தேக நபரை ஒப்படைத்துள்ளனர்.
இதேவேளை துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த மற்றொருவர், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஒ,5,26)

## கைபேசி...

றப்பட்டுள்ளது என்று அவர்கள் சரியாகக் கூறினார்கள். உங்களுக்கு பரிசில் விழுந்துள்ளது என்றனர். அதனால் நான் உண்மை என்று நம்பினேன்" என்கிறார் பாதிக்கப்பட்டவர்.
அழைப்பு எடுத்தவர்கள், பரிசுத் தொகைக்கான வரி ஒரு லட்சம் ரூபா, அதை நீங்கள் உடனே செலுத்தினால் பரிசுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளனர். அதை நம்பியவர் பணத்தை செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.
அழைப்பு எடுத்தவர்கள் பல கைபேசி இலக்கங்களைக் கொடுத்து, "ஈஸி காஸ்" மூலம் பணத்தைச் செலுத்துமாறு கூறியுள்ளனர். பணத்தை சிறு சிறு தொகையாக அனுப்புமாறும் தெரிவித்துள்ளனர்.
அதையடுத்து அந்த இலக்கங்களுக்கு 5 ஆயிரம் ரூபா, 4 ஆயிரம் ரூபா என மொத்தமாக 90 ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் அழைப்பெடுத்த இலக்கங்களும், ஏனைய இலக்கங்களுக்கும் அழைப்பு எடுத்தபோது அவை உபயோகத்தில் இருக்கவில்லை. அதன்பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயம் பாதிக்கப்பட்ட நபருக்குத் தெரிந்துள்ளது.
"நாங்கள் உடனடியாக யாழ்ப்பாணத்தில் உள்ள குறித்த தொலைபேசிப் பரிவர்த்தனை நிறுவனத்துக்குச் சென்றோம். அவர்கள் இது தொடர்பாகப் பொலிஸாரிடம் தான் முறைப்பாடு செய்ய முடியும்" என்று தெரிவித்தனர் என்றார் பாதிக்கப்பட்டவர்.
"அதன்பின்னர் முறைப்பாடு செய்வதற்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் சென்றோம். இது போன்ற வழக்குகள் பல உள்ளன , இது தொடர்பாக முறைப்பாடு செய்தும் பயனில்லை. நீங்கள்தான் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸார் அறிவுரைகள் கூறி அனுப்பினார்கள்" என்றும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.
வடக்கில் இவ்வாறான மோசடிகள் முன்னரும் நடந்துள்ளன. தொலைபேசி அழைப்புக்கள் மூலமும், குறுந்தகவல்கள் மூலமும் பெருந்தொகைப் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. வடமராட்சியில் உள்ள குடும்பம் ஒன்றிடம் குறுந்தகவல் மூலம் சுமார் 30 லட்சம் ரூபா இவ்வாறு மோசடி செய்யப்பட்டிருந்தது. அவர்கள் வங்கிக் கணக்குக்குப் பணத்தை வைப்பிலிட்டிருந்தனர். அது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஏ)



# மீன்பிடி வலைகள் விசமிகளால் எரிப்பு

*மன்னாரில் சம்பவம்*

மன்னார், மே 31
நான்கு லட்சம் ரூபா பெறுமதியான மீன் பிடி வலைகள் மன்னாரில் விசமிகளால் எரியூட்டப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பனங்கட்டிக் கொட்டுக் கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளியின் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளே இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு எரியூட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பாக தொழிலாளியால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

"மீன் பிடியை நம்பி எமது வாழ்வாதாரம் உள்ளது நானும் எனது தந்தையும் இணைந்தே இந்தத் தொழிலைச் செய்து வருகிறோம். கடந்த வருடமும் இவ்வாறு எமது வலைகள் எரிக்கப்பட்டன. நேற்றைய தினமும், நேற்றுமுன்தினமும் அடையாளம் தெரியாதவர்கள் எரித்துச் சென்றுள்ளார்கள். இது தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் குற்றவாளிகளை கண்டுபிடித்து எமக்கான தீர்வைப் பெற்றுத் தரவேண்டும்" என்று பாதிக்கப்பட்ட தொழிலாளி கேட்டுக் கொண்டார். (ஜ-213)

# டெங்குத் தாக்கம் யாழில் அதிகரிப்பு

*பொது மருத்துவ நிபுணர் பேரானந்தராஜா தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், மே 31**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த ஆண்டு இதுவரையிலான காலப் பகுதியில் 2 ஆயிரம் பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர் என்று, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. டெங்கு நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான முயற்சியில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ள நிலையில் மாவட்டச் செயலரால் நாளை முதல் டெங்கு விழிப்புணர்வு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

15 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களையும் சிறுவர்களையும் டெங்கு அதிகம் பாதித்துள்ளது. கடந்த வருடம் இலங்கையில் டெங்கின் தாக்கத்தால் ஒரு இலட்சத்துக்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 ஆயிரம் பேர் வரையில் பாதிப்புக்குள்ளானார்கள். அவர்களுக்குரிய சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு மே மாதம் வரை 2 ஆயிரம் பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாக காணப்படும். மழைவீழ்ச்சி அதிகம் காணப்பட்டமையால் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. அண்மையில் பெய்த மழை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கூடுதலாக சங்கானை, உரும்பிராய், நீர்வேலி, சுண்டுக்குளி போன்ற இடங்களில் இருந்து நோயாளர்கள் மருத்துவமனைக்கு வருகின்றார்கள், என்றார். (ஒ,5)



# மாளிகாவத்தையில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மே 31
மாளிகாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பாதாள உலக கோஷ்டியினருக்கு இடையில் நீண்டகாலம் நிலவும் பகைமையின் விளைவால் இந்த துப்பாக்கிச் சூடு நேற்று இடம்பெற்றுள்ளது.

39 வயதுடைய ரவூப் என்ற படுகாயமடைந்த நபர், முன்னாள் பிரபல தாதா மாமாஸ்மியின் சகா என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள அவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

# தேர்தல் பரப்புரையை இணைந்து முன்னெடுப்போம்

*மைத்திரி தெரிவிப்பு*

கண்டி, மே 31
சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்து பொதுத் தேர்தல் பரப்புரையை முன்னெடுக்கவுள்ளதாக, முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் நெருக்கடியால் தேர்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுத் தேர்தலில் வெற்றியைப் பெற இப்போது அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது தேர்தலை நடத்துவதற்கான சூழல் நாட்டில் இல்லை என்ற கருத்தை நான் நிராகரிக்கின்றேன். நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது, என்றார் மைத்திரிபால. (ஒ,5)

# படகுச் சேவைகள் நாளை முதல் வழமைக்கு

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான படகுச் சேவைகள் நாளை திங்கட்கிழமை முதல் வழமைபோல இடம்பெறவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச செயலர் எப்.சி.சத்திய சோதி அறிவித்துள்ளார்.

கொரோனா தாக்கத்தின் காரணமாக நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச் சேவைகள் கடந்த மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டன.

நெடுந்தீவு- குறிகாட்டுவான் இடையிலான படகு சேவைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வழமைபோன்று இடம்பெறும்.

வடதாரகை காலை 8 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு புறப்பட்டு மாலை 4 மணிக்கு மீண்டும் குறிகாட்டுவானை வந்தடையும். ஏனைய படகு சேவைகளும் வழமைபோன்று சேவையில் ஈடுபடும்.

மேலும் கொரோனா தொற்று காரணமாக சமூக இடைவெளியை பேணியே பொதுமக்கள் படகுகளில் பயணிக்க வேண்டியுள்ளதன் காரணமாக மேலதிக படகு சேவைகள் நடத்தப்படும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஒ,5)

# 'தமிழீழ சைபர் படை' மீண்டும் ஊடுருவல்!

*அரசின் 2 இணையத்தளங்கள் மீது தாக்கு!!*



கொழும்பு, மே 31
இலங்கை அரசின் இரண்டு இணையத்தளங்கள் மீது 'தமிழீழ சைபர் படை' எனும் குழு மீண்டும் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு www.pubad.gov.lk மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் www.slbfe.lk ஆகியவற்றின் இணையத்தளங்கள் மீது நேற்று அதிகாலை சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சைபர் பாதுகாப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் ஆதரவுடன் இயங்கும் 05 இணையத்தளங்கள் மீது கடந்த மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமன்று இக்குழுவினால் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் அந்த இணையத்தளங்கள் வழமைக்குக் கொண்டுவரப்பட்டன.

கடந்த 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறு ஒவ்வொரு வருடமும் 'தமிழீழ சைபர் படை' என்ற அமைப்பால் இலங்கை அரசுசார் இணையத்தளங்கள் சைபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (எ-22)

# சமூகஇடைவெளியை பின்பற்ற சொன்னால் முரண்படுகின்றனர்

*சாரதிகள், நடத்துனர்கள் தெரிவிப்பு*

வவுனியா, மே 31
பேருந்துகளில் ஏறும் பொதுமக்களிடம் சமூக இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்தினால், அவர்கள் எங்களுடன் முரண்படுகின்றார்கள் என்று வவுனியா மாவட்ட சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உள்ளூர் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளிலேயே இந்த நிலைமை காணப்படுகின்றது.

பேருந்துகளில் ஏறும் பொதுமக்களை முகக் கவசங்கள் அணியுமாறும் சமூக இடைவெளியைப் பின்பற்றி அமருமாறும் அறிவுறுத்தல் வழங்கினால் அவர்கள் எங்களுடன் முரண்படுகின்றனர். பேருந்தில் அதிகளவு பயணிகளை ஏற்ற முடியாத நிலைமையில், பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றாலும் எங்களுடன் மக்கள் முரண்படுகின்றனர். சமூக இடைவெளியை மக்கள் பின்பற்றி தமக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் கோரிக்கை விடுகின்றனர். (ஒ,5,110)

# இதுவரை யாழ்ப்பாணத்தில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு 91,000 பேருக்கு வழங்கப்பட்டது

## சமுர்த்தி பணிப்பாளர் எஸ். மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 31

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 91 ஆயிரத்து183 குடும்பங்களுக்கு இடர் கால இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எஸ். மகேஸ்வரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது; சமுர்த்தித் திணைக்களத்தினூடாக நாட்டில் கொவிட் 19 தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்டோருக்கு இடர்காலக் கொடுப்பனவாக முதல் கட்டம், இரண்டாம் கட்டமாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கல் கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் கட்டம் ஐயாயிரம் ரூபா நிதியைப்பெற்றுக்கொண்ட ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 503 குடும்பங்களில் தற்போது வரை 91 ஆயிரத்து 183 குடும்பங்களுக்கு நிதி வழங்கிவைப்பட்டுள்ளது.

எனினும் திணைக்களத்திலிருந்து எமக்கு நிதி விடுவிக்கின்ற ஒழுங்கின்படி நிதி பெறாதவர்களுக்கு குறித்த நிதியானது வழங்கப்படும். எனவே மக்கள் இது தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை 5000 ரூபா நிதியியை பெறாதவர்கள் தங்களுடைய பகுதி சமுர்த்தி உத்தியோகத்தரின் அறிவுறுத்தலைப் பின்பற்றி குறித்த நிதியை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ஐ- 111)



# அமரர் தொண்டமானுக்கு வவுனியாவில் அஞ்சலி

கொழும்பு, மே 31

மறைந்த முன்னாள் அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமானுக்கு வவுனியாவில் பல்வேறு அமைப்புக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா கூமாங்குளம் பொதுமண்டபத்தில் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அமரரது உருவப்படத்துக்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுப் பேருரைகளும் நடத்தப்பட்டன.

அதேவேளை, மன்னார் வீதியில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அலுவலகத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. (எ-110)

# அபகரிக்கப்பட்ட எரிந்தகாட்டை மீட்டு மக்களிடம் கையளிப்போம்

## ரவிகரன், சாள்ஸ் மக்களுக்கு உறுதி



முல்லைத்தீவு, மே 31

தமிழ் மக்கள் காலம் காலமாக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் வன வளத் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படும் எரிந்த காடு விவசாய நிலங்களை மீட்டு மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் எரிந்தகாடு (சகலாத்துவெளி) மானாவாரி விவசாய நிலங்களை, காணி உரிமையாளர்களான தமிழ் மக்கள் சீரமைப்புச் செய்வதற்குச் சென்றபோது, வனவளத் திணைக்கத்தினர் சீரமைப்புச் செய்யமுடியாதெனத் தடுத்திருந்தனர். இந்நிலையில் இது தொடர்பில் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரிடம் கொக்குத்தொடுவாய் விவசாயிகள் தெரியப்படுத்தியிருந்தனர்.

அதற்கமைய நேற்று சனிக்கிழமை துரைராசா ரவிகரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் விவசாய நிலங்களுக்குரிய தமிழ்மக்களையும், அப்பகுதிக்குரிய வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்களையும் அழைத்துச் சென்று குறித்தஎரிந்தகாடுவிவசாய நிலங்களைப் பார்வையிட்டனர். எரிந்தகாடு விவசாய நிலங்களில், கொக்குத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள், இடம்பெயர்வதற்கு முன்னரும், மீள்குடியேறப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் தொடர்ச்சியாக மானாவாரி நெற்செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந் நிலையில் தற்போது அந்த விவசாய நிலங்களை, காணிகளுக்குரிய தமிழ் மக்கள் துப்பரவு செய்வதற்கு எதற்காகத் தடைவிதிக்கின்றீர்கள் என ரவிகரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரால், அங்கு வருகைதந்த வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் கேட்கப்பட்டது.

தமிழ் விவசாயிகளுக்குரிய காணிகள் தான் எரிந்தகாடு விவசாய நிலங்களென, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் உறுதிப்படுத்துவார் எனில், கொக்குத்தொடுவாய்ப் பகுதி தமிழ் மக்கள் எரிந்தகாடுப் பகுதியில் விவசாய நடவடிக்கைளில் ஈடுபடுவதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென வனவளத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பில் எதிர்வரும் திங்களன்று, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலருடனும், உரிய அதிகாரிகளுடனும் பேசி இது தமிழ் மக்களுக்குரிய காணிகள் தான் என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ரவிகரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் தெரிவித்தனர்.

மேலும் குறித்த எரிந்தகாட்டுப் பகுதியில் 121தமிழ் மக்களுக்குரிய, 490 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-246)



# முன்னாள் ஆளுநர் மார்ஷல் பெரேரா காலமானார்

கொழும்பு, மே 31

முன்னாள் ஆளுநர் மார்ஷல் பெரேரா தனது 88வது வயதில் நேற்றுக் காலமானார்.

இவர் சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் ஆளுநராக பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சட்டத்துறையில் நீண்டகால அனுபவத்தைக் கொண்ட இவர், நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் தந்தை யாவார். (ப)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், மே 31

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை திங்கட்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** அராலிப் பிரதேசம், செட்டியார்மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார் கோவிலடி, அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலை ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி மாவட்டத்தில்** சாந்திபுரம் பிரதேசம், **வவுனியா மாவட்டத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி,துட்டுவாகை ஒரு பகுதி, **மன்னார் மாவட்டத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம்,தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம்,தரவன் கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், இசைமலைத்தாழ்வு ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# ஜூன் முதலாம் திகதி 33 ரயில்கள் சேவையில்



ஜூன் முதலாம் திகதி முதல் 33 ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக 19 ஆயிரத்து 593 பேர்வேலைக்காகப்பயணிக்கரயில்வே திணைக்களத்தில் பதிவு செய்துள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதேவேளை அடுத்த வாரம் முதல் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஸ்களை சேவையில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

ஏற்கனவே 4 ஆயிரத்து 800 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்தார்.

இடைக்காலப் பயணங்களுக்காக 3 ஆயிரத்து 200 தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (க)

# எதிரணியை உடைக்கும் ஒப்பந்தம் ஐ.தே.கட்சிக்கு

## அரசுடன் சேர்ந்து இயங்குகின்றது என்று வேலுகுமார் குற்றச்சாட்டு



**கொழும்பு, மே 31**

**பலமானதொரு எதிரணி உருவாவதை தடுக்கும் ராஜபக்ஷ படையணியின் நயவஞ்சக திட்டத்தை நிறைவேற்றும் ஒப்பந்தக்காரர்களாகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் செயற்பட்டுவருகின்றனர்.**

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான வேலுகுமார் நேற்று தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தலின்போது இறுதி நேரம்வரை இழுத்தடிப்புச் செய்தே ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை அறிவிக்கும் முடிவை ஐக்கிய தேசியக் கட்சி எடுத்தது. அதுமட்டுமல்ல தேர்தல் காலப்பகுதியில் எம்.சி.சி. உடன்படிக்கை கைச்சாத்து முயற்சி, நான்தான் அடுத்த பிரதமர் என்ற ரணிலின் அறிவிப்பு போன்றனவே ஆளுங்கட்சியாக இருந்தும் எமது வேட்பாளரின் வெற்றியைத் தடுத்தது.

புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கும், பிரதமர் வேட்பாளராக சஜித்தை போட்டியிடவைப்பதற்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியிருந்தது. பங்காளிக்கட்சி என்ற வகையில் எமக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இறுதி நேரத்தில் ஐ.தே.க. தனிவழி செல்லும் முடிவை எடுத்தது.

அந்தக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் ஐக்கிய மக்கள் சக்தி எனும் எமது அரசியல் கூட்டணியிலேயே அங்கம் வகிக்கின்றனர். ரணில் தரப்பு என்பது ஆளுங்கட்சியுடன் உறவு வைத்துள்ள கட்சியாகும்.

பலமானதொரு எதிரணியை உருவாக்கி தூரநோக்கற்ற இந்த அரசாங்கத்தை மக்கள் ஆணையுடன் வீட்டுக்கு அனுப்புவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இது ஆளுங்கட்சிக்கு பெரும் தலையிடியாக உள்ளது. அதனாலேயே எமது அணியில் உள்ளவர்கள் அரசியல் ரீதியில் வேட்டையாடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுவருகின்றனர். அதேபோல் எம்மீது தாக்குதல் தொடுத்து பலவீனப்படுத்தும் ஒப்பந்தம் ஐக்கிய தேசியக்கட்சிக்கே வழங்கப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்றுவதே ரணில் அணியின் பணி. எமது அணியின் வேட்பு மனுவை சவாலுக்குட்படுத்தி வழக்கு தொடுத்துள்ளதன் பின்னணிகூட அதுவேதான்.

ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்தி, மக்கள் விரோத ஆட்சிக்கு முடிவு கட்டி முடியாட்சி அல்லாமல் குடியாட்சியை உருவாக்குவதற்கு அணி திரளுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (ஏ-44)

# யாழ் பல்கலை துணைவேந்தர் தெரிவுக்கு மதிப்பீட்டுக் குழு பிரதிநிதிகள்

யாழ்பாணம், மே 31

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக வெற்றிடமாகக் காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கான மதிப்பீட்டுக் குழுவின் யாழ்ப்பாண பல்கலைக்கழக மூதவைப் பிரதிநிதிகள் பேரவையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டத்திலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் மூத்த பேராசிரியர் கி. விசாகரூபன் மற்றும் விலங்கியல் துறையின் மூத்த பேராசிரியர் எஸ். நோபிள் சுரேந்திரன் ஆகியோரே மூதவையின் சார்பில் பேரவையினால் துணைவேந்தர் தெரிவுக்கான மதிப்பீட்டுக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையின் வழிகாட்டு தல்களுக்கமைய துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களில் இருந்து தகுதி, தராதரங்களின் அடிப்படையில் புள்ளியிட்டு, பொருத்தமானவர்களில் ஆகக் கூடியது ஐந்து ( ஐந்துக்குக் குறைவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் ஆகக் குறைந்தது மூன்று) விண்ணப்பதாரிகளைப் பட்டியலிடும் பணியை மேற்கொள்வதற்கென மதிப்பீட்டுக் குழு ஒன்று விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் (ஜூன் 9) அமைக்கப்படுதல் வேண்டும். இந்த மதிப்பீட்டுக்குழுவில் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் மூதவையில் அங்கம் வகிக்கும் மூத்த பேராசிரியர்கள் இருவரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூவரும் இடம்பெறுவர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூவரில் ஒருவர் குறிப்பிட்ட பல்கலைக் கழகம் சாராத பிறிதொரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தராகவும், குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் பேரவையில் அங்கம் வகிக்காத ஒருவராகவும் இருத்தல் வேண்டும். அவரே துணைவேந்தர் தெரிவுக்கான மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகச் செயற்படுவார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் ஏனைய இருவரில் ஒருவர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த அதிகாரியாகவும், அமைச்சரவை அங்கீகாரமுள்ள அமைச்சு ஒன்றின் செயலாளராகவும் இருப்பார். மூன்றாமவர் பிரபல்யமான அரச அல்லது தனியார் நிறுவனமொன்றின் தலைவராகவோ, பிரமத நிறைவேற்று அதிகாரியாகவோ இருப்பார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மதிப்பீட்டுக் குழுவுக்கு நியமனம் செய்யப்படுபவர்களின் விவரங்கள் எதிர்வரும் ஜூன் முதல் வாரத்துக்கு முன்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வட்டாரங்களில் இருந்து அறியக் கிடைத்தது.

கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் காரணம் எதுவும் கூறப்படாமல் பதவியில் இருந்து அகற்றப்பட்ட பின் துணைவேந்தருக்கான அதிகாரங்களுடன் கடந்த வருடம் மே மாதம் முதல் மூன்று மாத காலத்துக்கு வாழ்நாள் பேராசிரியர் க. கந்தசாமி தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். (ப-20)

# துப்பாக்கிச் சூட்டை வேடிக்கை பார்த்தவர்களின் பதவி பறிப்பு

மொரட்டுவ சொயிசாபுரத்தில் உள்ள விடுதியொன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கு கடமையில் இருந்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அந்த விடுதிக்கு முன்பாகக் கடமையில் ஈடுபட்டிருந்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அந்தச் சம்பவத்தைத் தடுக்க எந்த முயற்சியும் எடுக்காதமை பாதுகாப்புக் கமராப் பதிவுகளில் உறுதியானதை அடுத்தே அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மொறட்டுவையில் உள்ள சிற்றுண்டிச் சாலை ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அந்தப் பகுதியைச் சேர்ந்த கொள்ளையர்கள் அந்த சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களிடம் கப்பம் கேட்டனர் என்றும், அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததால் வெள்ளைவான் ஒன்றில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (ஏ)

# வெல்ல உற்பத்திக்கு தெற்கில் கிராக்கி

சாவகச்சேரி, மே 31

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ள வெல்ல உற்பத்திக்கு தென்பகுதியில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தினால் கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் வெல்ல உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலம் தொடக்கம் தென் பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்தைக் கொள்வனவு செய்தன. மார்ச் மாதம் தொடக்கம் கொரோனாத் தொற்றுக் காரணமாக தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்ய முடியாத நிலை காணப்பட்ட போதிலும், உற்பத்தியை நிறுத்தவில்லை. கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதால் கள்ளுத் தவறணைகள் மூடப்பட்டிருந்தன. அவ்வேளையில் சங்க அங்கத்தவர்களின் தொழில் பாதிப்பு ஏற்படாதிருக்க கள் உற்பத்திக்குப்பதிலாக பதநீர் உற்பத்தி செய்து வழங்குமாறு அங்கத்தவர்களுக்கு சங்கம் அறிவித்திருந்தது. அவ்வேளையில் உற்பத்தி செய்யப்பட்ட பதநீரில் பனை வெல்லம் தயாரிக்கப்பட்டது. தற்போது ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்து பெருமளவு பனை வெல்லம் தென் பகுதி வர்த்தகர்களால் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது. எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# கிரிக்கெட் மைதானத்துக்காக பிச்சையும் எடுப்பாராம் பந்துல

கொழும்பு, மே 31

இலங்கையின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானத்தைக் கட்டும் யோசனையைக் கைவிடவில்லை. அந்தக் கட்டுமானத்துக்கு நிதியளிப்பதற்காகப் பிச்சை எடுக்கவும் தயாராக இருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் பந்துல குணவர்த்தன.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ள தாவது:

இலங்கை அரசிடம் இருந்தோ இலங்கைக் கிரிக்கெட்டிலிருந்தோ நிதி பெறாது அந்த மைதானத்தைக் கட்ட முடியும் என்று நம்புகின்றேன். வேறு யாரிடமிருந்தும் நிதியுதவி பெற மாட்டேன். ஹோமாகம சர்வதேச கிரிக்கெட் மைதானத்தைக் கட்டுவதற்கு வெளிநாடுகளில் கூடப் பிச்சை எடுக்கத் தயார்- என்றார்.

நாட்டின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானத்தை ஹோமகமவின் தியாகாமாவில் 26 ஏக்கர் பரப்பளவில் 60 ஆயிரம் இருக்கைகளுடன் 40 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. தியாகாமாவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் கட்டுவதற்கான திட்டம் இடைநிறுத்தப்பட வேண்டும் என்றும், பள்ளிக் கிரிக்கெட் மைதானங்களின் வளர்ச்சிக்கு அந்த நிதி செலுத்தப்பட வேண்டும் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச கடந்த வாரம் அறிவுறுத்தியிருந்தார். (ஏ)

# வாழைச்சேனை கடதாசி ஆலையின் பரீட்சார்த்த வேலை நேற்று ஆரம்பம்

**யாழ்ப்பாணம், மே 31**

**கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் மூடப்பட்ட கிழக்கு மாகாணத்தின் பாரிய தொழிற்சாலையான வாழைச்சேனை கடதாசி ஆலை ஜனாதிபதி கோத்தாபயவின் ஆட்சியில் பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்கு ஆரம்பிப்பட்டுள்ளது என்று அமைச்சர் விமல் விரவன்ச தெரிவித்தார்.**

பல வருடங்களாக மூடப்பட்டிருந்த வாழைச்சேனை கடதாசி ஆலையின் வேலைகள் ஜனாதிபதி கோத்தாபயவின் ஆலோசனைக்கமையவும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வழிகாட்டலிலும் மீள இயக்கப்பட்டுள்ளது. நேற்று பரீட்சார்த்த நடவடிக்கையாக அட்டை தயாரிக்கும் இயந்திரம் இயங்க வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் கைத்தொழில் அமைச்சராக இருந்த றிஸாத் பதியுதீனிடம் இவ் ஆலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு கடதாசி ஆலை



யின் ஊழியர்கள் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொண்டும் அது பலன் இல்லாமல்போன நிலையில்தற்போதைய அரசாங்கத்தின் முயற்சியால் இன்று (நேற்று)பரீட்சார்த்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடராக கடதாசி ஆலை முழுமையாக இயங்கப்படவுள்ளது டன் வேலைவாய்ப்புக்களும் வழங்கப்படவுள்ளது என்றார்.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் கடதாசி ஆலையின் தலைவர் விமல் ரூபசிங்க, அமைச்சின் உயர் அதிகாரிகள், வாழைச்சேனை கடதாசி ஆலையின் பதில் முகாமையாளர் எஸ். அம்பிகாவதி உள்ளிட்ட பலர் பலந்து கொண்டனர். (ப-150)

# மானிப்பாயில் அனர்த்த முகாமைத்துவ நிதியம்

மானிப்பாய்,மே 31

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்கான அனர்த்த முகாமைத்துவ நிதியம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான செயற்பாட்டுக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிகழக்கூடிய அனர்த்தங்களை முகாமை செய்தல், அனர்த்தத்துக்கு உள்ளாகிய ஆள்களுக்கு நிவாரணம் அளித்தல், அனர்த்த ஆபத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்கான அனர்த்த முகாமைத்துவ நிதியம் அமைப்பது என சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைவாக வலி தென்மேற்குப் பிரதேச சபை அனர்த்த முகாமைத்துவ நிதியம் நிறுவப்பட்டுள்ளது என்று சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

இதன் தலைவராக சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், உப தலைவராக, உப தவிசாளர் சி.கனேசவேல், செயலாளராக சபையின் செயலாளர் கு.சற்குணராஜா, பதவி வகிப்பார்கள் என்பதுடன், குழுவின் உறுப்பினர்களாக அருட்குமார் ஜோன் ஜிப்ரிக்கோ, லோகப்பிரகாசம் ரமணன் மற்றும் சிவனேஸ்வரி வாசுதேவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரதான தீயணைப்பாளர் ஆகியோரும் உறுப்பினர்களாகச் செயற்படுவர்.

குழுவின் பதவிவழி உறுப்பினர்களாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர், பிரதேச செயலாளர், சுகாதார மருத்துவ உத்தியோகத்தர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதேச அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் 3 பிரதிநிதிகள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், வணிக சபை அல்லது வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர், இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண முகாமையாளர், வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பிரதிநிதி, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது இவர்களது பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.

அனர்த்த முகாமைத்துவ நிதியமானது வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில், சபை நிதி ஒதுக்கீட்டில் அனர்த்தத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்த முடியும். அதற்கு மேலதிகமாக வேறு ஏதேனும் அமைப்பால் அல்லது தனியொருவரால் நிதி வழங்கப்படுமாயின் அந்நிதி உள்நாட்டு நிதி மூலமாயின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான மாகாண அமைச்சரினதும், வெளிநாட்டு நிதி மூலமாயின் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினதும் அனுமதி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். நிதியுதவியிலிருந்து அனர்த்தகால கருமங்கள் அதற்குத் தேவையான உபகரணங்கள், கருவிகள் அல்லது பொருள் ரீதியான உதவிகளை வழங்க முடியும் என்றும் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-115)

# திருநெல்வேலி பொதுச்சந்தை வியாபாரிகளுக்கு இட ஒதுக்கீடு



கொவிட் 19 வைரஸ் தொற்றுக் காரணமாக நாட்டில் ஊரடங்கு அமுல்ப்படுத்தப்பட்டதால், கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னர்யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுச் சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை பொதுச் சந்தைகளை மீளத் திறப்பதற்கு யாழ் மாவட்டச் செயலரால் அறிவுறுத்தப்பட்டது. அதற்கமைய யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச்சந்தை திங்கட்கிழமை மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்படவுள்ளது. இந்த நிலையில் நல்லூர் பிரதேச சபையினரால் திருநெல்வேலி சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீடுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பொதுச் சந்தையில் 245 க்கும் மேற்பட்ட மரக்கறிவியாபாரிகள் வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

கொரோனா தாக்கத்தின் காரணமாக சமூக இடைவெளியை பேண வேண்டிய நிலை காணப்படுகின்றதால் பொதுச் சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் பொதுச் சந்தைக்கு வரும் பொது மக்களுக்கிடையில் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய நிலை உள்ளது. இதனால் இட ஒதுக்கீடுகள் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றக் கூடியவாறாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

திருநெல்வேலி பொதுச்சந்தை காலை 5 மணி முதல் மக்கள் பயன்பாட்டுக்காக மீளத் திறக்கப் படவுள்ளது இன்று ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளதால் நேற்று குறித்த சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கு சுகாதார நடைமுறைகளை பின்பற்றும் இட ஒதுக்கீடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இட ஒதுக்கீட்டின் போது சில முரண்பாடுகள் சந்தை வியாபாரிகளுக்கும் எமக்குமிடையில் ஏற்பட்டது. சந்தை வியாபாரத்தில் ஈடுபடும்வியாபாரிகள்சிலர் குறித்த பகுதியில் இரண்டு, மூன்று இடங்களில் ஒருவர் இவ்வளவு காலமும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாகவும் அதனைத் தமக்கு தற்போதைய சூழ்நிலையில் வழங்குமாறு கேட்டுக் கொண்டதால் அந்த முரண்பாடு ஏற்பட்டது.

எனினும் அனைவரையும் சமாதானம் செய்து இட ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளோம் என்று நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார். (ப-111)

## எலும்புக்கூடாக பெண் மீட்பு

கொழும்பு, மே 31

வெல்லவாய, குடாஓயா பொலிஸ் பிரிவில் காணாமல் போயிருந்த யுவதி 23 நாளின் பின்னர் காட்டுப்பகுதியில் இருந்து எலும்புக்கூடாக மீட்கப்பட்டுள்ளார். இதன்போது அவரது மண்டையோடு, தோள்பை என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் யுவதியை கொலை செய்த குற்றச்சாட்டில் அவரது சகோதரி மற்றும் கணவனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ப)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகன நெரிசல்

கொழும்பு,மே 31

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் காரணமாக கஹதுடுவ நுழைவாயில் பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் வாகன நெரிசல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

சோதனை நடவடிக்கையின் காரணமாக போக்குவரத்து நெரிசல்காணப்பட்டது. ஆனால் தற்போது போக்குவரத்து நடவடிக்கைகள் சீரான முறையில் இடம்பெற்று வருகின்றன என்று அதிவேக நெடுஞ்சாலை பராமரிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# முகக் கவசம் அணியாவிடின் இனிமேல் சட்டம் பாயும்

*கிளி.பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை*

கிளிநொசசி, மே 31

முகக் கவசம் அணியாமல் வெளியிடம் சென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் மக்கள் முகக் கவசம் அணியாமல் செல்வதையும், கூட்டம் கூட்டமாக நிற்பதை அவதானிக்க முடிகிறது. தற்பொழுது நாட்டின் நலன் கருதி மக்கள் வீட்டிலிருந்து வெளியில் செல்லும் பொழுது முகக் கவசங்களை அணிந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனை மீறி முகக் கவசமின்றி வெளியில் செல்வோர் பொலிஸாரால் அவதானிக்கப்பட்டால் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். எனவே இனிவரும் காலங்களில் மக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும். இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட தனியார் போக்குவரத்துப் பிரிவினர் தாம் முகக் கவசம் அணியாத எவரையும் பேருந்தில் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளர் எனவே மக்கள் தம் நலன் கருதியும், பிறர் நலம் கருதியும் பயணிக்கும் பொழுது முககவசம் அணிந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-113)

# தொலைபேசிகள் ஊடாக மாணவர்களுக்கு கற்றல்

## கல்வி அமைச்சின் மற்றொரு திட்டம்

**கொழும்பு, மே 31**
**இணைய வசதியுடைய அல்லது இல்லாத எந்தவொரு தொலைபேசியையும் பயன்படுத்தி கட்டணமின்றி வீட்டிலிருந்தவாறே, பாடசாலை ஆசிரியர்களிடம் கல்வி கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க கல்வியமைச்சுடன் டயலொக் ஆஸியாட்டா நிறுவனம் இணைந்துள்ளது.**




அதற்கமைய, கல்வியமைச்சின் 1377 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் ஒரே தடவையில் 45 மாணவர்களை இணைத்துக் கொண்டு கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்கான கணினி மென்பொருள், டயலொக் ஆஸியாட்டா நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதன்முதல் கட்டமாக நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பாடசாலைகளுக்கு இந்த வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் தலைமையில் கல்வியமைச்சில் நடைபெற்றது. நிகழ்வில் டயலொக் ஆஸியாட்டா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (சு)

# கொரோனாவை காரணம் காட்டி வடக்கில் இராணுவப் பிரசன்னம்

## செல்வம் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு

வவுனியா, மே 31
கொரோனா அச்சுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு வடக்கில் தொடர்ந்தும் இராணுவ மயப்படுத்தல் செயற்பாடுகள் நடக்கின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.
அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில் உள்ளதாவது
வடக்கு மாகாணம் இராணுவ மயப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பாக நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்றோம். ஆனால் இது தொடர்பில் ராஜபக்ச அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எமது மக்களைச் சொல்லொணா துன்பத்துக்கு உள்ளாக்கி வருகின்றது.
நாட்டின் எந்தப் பாகத்திலும் இல்லாத அளவு வடக்கில் இராணுவச் சோதனைச் சாவடிகளும், ரோந்து நடவடிக்கைகளும் தலைதூக்கியுள்ளன. இது மக்களை அச்சத்துக்குள்ளும், போர் மனோநிலையிலும் வைத்திருப்பதற்காகவா என்ற சந்தேகம் தோன்றுகின்றது.
கொரோனா தொற்றைக் காரணம் காட்டி வடக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகரித்துள்ளது. பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டிய சிவில் நிர்வாகச் செயற்பாடுகளை இராணுவத்துக்கு வழங்கி வடக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்க அரசு முற்படுகின்றது என்று தோன்றுகின்றது. தமிழ் மக்களை அடக்கி வைத்திருந்து எதிர்வரும் தேர்தல் காலத்தில் தென்னிலங்கையில் தம்மை வீரர்களாகக் காட்டவே ஜனாதிபதியும், பிரதமரும் எண்ணுகின்றனர்.
இராணுவப் பிரசன்னம் சர்வதேச விதிமுறைகளுக்கு அமையக் காணப்பட வேண்டும். சர்வதேச ஒழுக்க நெறியை மீறி இந்த அரசு, தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கிச் சாதிக்க நினைப்பவைகளை ஈடேற்றுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றும் தடையாகவே இருக்கும். என்றுள்ளது. (ஏ-110)

# ஆறுமுகன் தொண்டமானுக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,மே 31
இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானுக்கு யாழ்ப்பாணத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.
அமரர் ஆறுமுகன் தொண்டமானின் உருவப்படம் வைக்கப்பட்டு அவருக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆனந்த சங்கரி, பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, மத குருக்களான சச்சிதானந்தம் ,நாகவிகாரை விகாராதிபதி எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-111)



# ஜனநாயக குரல்களை நசுக்கி இராணுவ ஆட்சிக்கு முயற்சி!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 31
தமிழ் மக்களின் ஜனநாய ரீதியான உரிமைக் குரல்களை நசுக்கி, மீண்டும் ஒரு இராணுவ ஆட்சியை நிலை நாட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
நாகர்கோவில் குண்டுவெடிப்புச் சம்பவம், அமைச்சுக்களின் செயலாளர்களாக இராணுவ அதிகாரிகள் நியமனங்கள் போன்றன தமிழ் மக்களை அச்ச நிலைக்குள் வைத்திப்பதற்காக அரசு எடுத்த நடவடிக்கைகளே. வடமராட்சி, நாகர்கோயில் பகுதியில் நடந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் குடவத்தை பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சிலரைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.
இவை தமிழ் மக்களை அச்சுறுத்துகின்ற அல்லது பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான அச்சத்தை மீண்டும் ஏற்படுத்துகின்ற நடவடிக்கையாகவே நாங்கள் பார்க்கின்றோம்.
தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான உரிமை குரலை அல்லது உரிமைக்கான போராட்டங்களை பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு நசுக்குகின்ற அரசின் செயற்பாட்டின் ஆரம்பப் புள்ளியாக இவை அமைகின்றது என்பதை ஊகிக்க கூடியதாக உள்ளது-என்றார். (ஏ-20)

# தாக்குதலில் ஒருவர் காயம்

தென்மராட்சி, மே 31
தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த 36 வயதுடைய குடும்பத் தலைவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலாவி வடக்கில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. (ஐ)

# ஆண்டுதோறும் 20,000 பேர் புகையால் சாவு

## சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் இன்றாகும்

கொழும்பு, மே 31
புகைப்பிடித்தல் காரணமாக இலங்கையில் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன. புகைபிடிக்காத போதும், புகைப்பிடிப்பவர்களை சூழவுள்ளதால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் வருடாந்தம் அதிகரித்து வருகின்றது.



சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் இன்றாகும். 1987 ஆம் ஆண்டில் மே 31 ஆம் திகதியை உலக புகையிலை எதிர்ப்பு தினமாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது. அன்று முதல் இன்று வரை இந்தத் தினத்தில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இந்த ஆண்டும் புகையிலை உற்பத்தியாளர்களின் சூழ்ச்சிப் பொறிக்குள் இருந்து இளைஞர்களை மீட்டுப்போம் என்ற தொனிப்பொருளின் கீழ் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.
இலங்கையில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தகாலப்பகுதியில் புகையிலை பாவனையைக் குறைப்பதற்கு பல நடவடிக்கைளை முன்னெடுத்திருந்தார். ‘சிகரெட் பக்கெட்டுகளில்’ 80 வீதம் எச்சரிக்கை புகைப்படங்கள் காட்சியப்படுத்தப்பட வேண்டும் என்பது உட்பட பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. எனினும், புகைத்தல் மற்றும் புகையிலை பாவனைக்கும் அடிமையானவர்கள் இன்னும் இருக்கவே செய்கின்றனர். கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தற்போது புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கையில் சிறு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும், இளைஞர்களை இதற்கு அடிமையாக்கும் வகையிலான பரப்புரைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. (ஏ-44)

# 6 குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள்


தென்மராட்சி,மே 31
தென்மராட்சி பிரதேசத்தில் அண்மையில் வீசிய அம்பான் புயலால் பகுதியளவில் வீடுகள் சேதமடைந்த ஆறு குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.
ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை வழங்கப்படவுள்ளன.
இதற்கான காசோலைகள் இடர்காப்பு முகாமைத்துவ அமைச்சால் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (ஐ-9)

# அரசின் செயற்பாட்டால் வைரஸ் கட்டுப்பாட்டில்

## கொழும்பு மேயர் தெரிவிப்பு

கொழும்பு, மே 31
அரசு செயற்பட்ட விதம் காரணமாகவே கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தலில் இலங்கை வெற்றிகரமான நிலைமைக்கு வந்துள்ளது என்று கொழும்பு மாநகர மேயர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
சிறந்ததை சிறந்தது என்றும் தவறை தவறென்றும் கூற நான் தயங்கியதில்லை. மே மாதம் முதலாம் திகதி முதல் கொழும்பு நகரில் கொரோனா வைரஸ் தொற்றிய எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் அனைத்தும் இன்னும் சரிப்படுத்தப் படவில்லை என்பதால், தேவையான விடயங்களுக்காக மாத்திரம் நகருக்குள் வருமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்- என்றார். அரசுக்கு துணை போகின்றீர்களா என செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்துள்ள மேயர், பெண் என்ற வகையில் தனக்கு முதுகெலும்பு உள்ளது என்றும், பிளவுபட்ட அரசியலுக்கு பதிலாக ஒற்றுமையான அரசியலையே விரும்புகின்றேன் என்றும் பதிலளித்தார். (எ)





# இடைவெளியை பேண கழுத்துப்பட்டி சாதனம்

## கல்முனை மாணவனின் முயற்சி

கொழும்பு, மே 31
கொரோனா தொற்றுநோய் காரணமாக தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள, தனிநபர் இடைவெளியைப் பேணும் செயற்பாட்டுக்கு உதவும் வகையில் நவீன ஸ்மாட் தொழில்நுட்பத்துடனான மின்னியல் கழுத்துப்பட்டி சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
சாதனத்தை அம்பாறை கல்முனை கல்வி வலயத்தில் மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியில் உயர்தரப் பிரிவின் தொழில்நுட்பத் துறையில் கல்விகற்று வரும் எம்.எம்.சனோஜ் அகமட் என்ற மாணவன் கண்டுபிடித்துள்ளார்.
தனியார் நிறுவங்களில் பணியாற்றுவோர் ,அரச அலுவலகங்கள் உள்ளிட்ட பொது நிறுவனங்களில் ஒரு மீற்றர் தனிநபர் இடைவெளியை தமக்கிடையே பேணிக் கொள்வதற்கு இந்த சாதனம் பெரிதும் உதவுகிறது.
தனிநபர் இடைவெளி மீறப்படும் போது ஒலியை முப்பி கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதுடன், இரவு வேளைகளில் ஒளி எழுப்பி சமிஞ்சை செய்யும் வகையில் இந்த சாதனம் தயாரிக்கப்பட்டுள்ளது.
சந்தையில் கிடைத்த ஒரு சில உபகரணங்களைக் கொண்டு இந்த கழுத்துப்பட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி கைக்கடிகாரம், அலுவலக அடையாள அட்டை, தலைக்கவசம் போன்ற அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்களிலும் செயற்படுத்த முடியும் . (க)

# கட்டுப்பாட்டைத் தளர்த்துவது கொரோனாவை வலுவூட்டும்!

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொழும்பு, மே 31
**கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த உலக நாடுகளால் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளைத் தளர்த்துவதன் மூலம் வைரஸ் தாக்கம் குறைவடையாது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

World Health Organization

உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிறப்பு பிரதிநிதி டேவிட் நபரோ இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது தனி ஒருவர் சமூகத்தில் நடமாடுவது அதிகரிப்பதால் வைரஸ் பரவல் விரைவில் அதிகரிக்கக்கூடும். எனவே பயணக் கட்டுப்பாடுகளை குறைத்திருந்தாலும், முடிந்தளவு தனிநபர் இடைவெளியைப் பேணுவது அத்தியாவசியம்.
ஒருவருக்கு நோய் அறிகுறிகள் காணப்படின் அவர் உடனடியாக தம்மை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். கொவிட் 19 தொற்று நோயின் வீரியம் குறைவடைந்து வருவதை கருத்தில் கொண்டு சில நாடுகள் வெளிநாட்டு பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளன.
ஆனால் அந்த நாடுகளிலிருந்து புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்-என்றார். (க)

# வெளிநாட்டிலிருந்து வந்தால் பீ.சீ.ஆர். இனிமேல் கட்டாயம்



கொழும்பு, மே 31
வெளிநாடுகளில் இருந்து வரும் அனைத்து பயணிகளுக்கும் விமான நிலையத்திலேயே பீ.சீ.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்ர சில்வா உள்ளிட்ட குழுவினர், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
விமான நிலையப் பாதுகாப்பு பிரிவுடன் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினருக்கும் கொவிட் 19 தொற்று ஏற்படாமல் தடுப்பதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக விமான நிலையத்தை திறப்பது தொடர்பில் கடந்த வாரம் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.
அதற்கமைய விமான நிலையத்தினுள் நிலவும் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# வற்றாப்பளை அம்மனுக்கு தீர்த்தம் எடுத்தல் திங்கள்

முல்லைத்தீவு, மே 31
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கலுக்கான தீர்த்தம் எடுத்தவரும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.
முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் உப்பு நீரில் 7 நாள்கள் விளக்கெரியும் அற்புதக் காட்சியும், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் பொங்கல் நிகழ்வுக்கான தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் எதிர்வரும் திங்கட்கிழமை வழமை போன்று நடைபெறும் என்று காட்டு விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.
தீர்த்தம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்ட குழுவினர் காட்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் புறப்பட்டு, ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலய முன்வாசல் வழியாக , முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியூடாக சிலாவத்தைத் தீர்த்தக் கரையை அடைந்து அங்கு தீர்த்தம் எடுக்கவுள்ளனர். காட்டு விநாயகர் ஆலயத்தில் திங்கள் இரவு 12 மணிக்கு மடை பரவப்பட்டு உப்பு நீர் விளக்கு ஆரம்பிக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.
தொடர்ந்து 7 நாள்கள் காட்டு விநாயகர் ஆலயத்தில் விளக்கு எரிக்கப்படும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஆலயத்தில் பாரம்பரிய பூசை செய்வதற்கு நிர்வாகம் உள்ளிட்ட 40 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், பொதுமக்கள் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-19)

பருவப்பெயர்ச்சிக் காற்றால்

# யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆறு குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் ஆரம்பமான தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்றின் காரணமாக இதுவரை 6 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றின் தாக்கம் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காற்றினுடைய தாக்கம் அதிகளவில் உணரப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் காற்றின் தாக்கமானது உயர்வானதாக உணரப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் மாலை வீசிய காற்றுக் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
இந்த பருவப் பெயர்ச்சிக் காற்றானது ஜீன் மாதம் வரை வீசக்கூடும் என்பதால் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ-111)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன. )

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 4

பகுதி– II

ஆக்கம்: த.தயானந்தன்
அதிபர்
யா/கீரிமலை நகுலேஸ்வரா வித்தி.

நேரம்: 1 மணி 45 நிமிடம் பெயர்: ................................ .

பாடசாலை: ................................................

**1) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

உலகத்திலே உள்ள எல்லா மக்களுக்கும் முக்கிய உணவாக அமைந்தவை தானிய உணவு வகைகளே. அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தானியவகைகள் உணவாகக் கொள்ளப்படுகின்றன. தானிய உணவில் பொதுவாக மாச்சத்து இருக்கின்றது. இது உணவு வகைகளில் முக்கியமானதாகும். அரிசி நமது நாட்டு மக்களின் முக்கிய உணவாகும்.

i) பூமியிலுள்ள எல்லா மக்களினதும் பிரதான உணவு யாது?
.................................................................................................

ii) சாப்பாடு என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?
.................................................................................................

iii) அஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் யாது?
.................................................................................................

iv) தானிய வகைகள் இரண்டின் பெயரை எழுதுக?
.................................................................................................

v) உயர்திணை பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக?
.................................................................................................

vi) இரட்டைக் கொம்பும் அரவும் மட்டும் ஒன்றாய் அமைந்த சொல் யாது?
.................................................................................................

2) பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.
i) ஆறப் போடுதல்: ...................................................................................
ii) வாயூறுதல்: .........................................................................................

3) சுருக்கக் குறிகளை விரித்து எழுதுக.
i) இ.மி.ச. : ...............................................................................................
ii) அ.ப. : .................................................................................................

4) முள் + செடி என்பதைச் சேர்ந்தெழுதுக.
.................................................................................................

5) சரியான வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.
i) அந்திவானம் செந்நிறமாகக் ....................................................................
(காணப்பட்டது/ காணப்பட்டன)
ii) வேகமாக வீசிய காற்றினால் மரங்கள் முறிந்து............................................
(விழுந்தது/ விழுந்தன)

6) மரபுப் பெயர்களை எழுதுக.
i) குதிரை கனைக்கும் என்பது போல எருது ..................................................
ii) குரங்கின் ஆண்பாற் பெயர்: ......................................................................

7) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.
ஒரு பானை........................................................... ஒரு சோறு பதம்

8) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
வானொலி/ வானிலை/ ஊடாக/ தொலைக்காட்சி/ கொள்கின்றோம்/ பற்றி/ நாம்/ அறிந்து/
.................................................................................................
.................................................................................................


9) சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.
கால்கோல் விழா / கால்கோள்விழா

10) தனிச் சொல்லை எழுதுக
ஒன்றைப் போல் இருக்கும் மற்றொன்று: ...................................................

11) கீழே தரப்பட்டுள்ள ஆண்பாற் சொல்லுக்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக.
மருத்துவன்: ..........................................................................................

12) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
i) Jasmine : ..................................
ii) Knife : ......................................

13) பின்வரும் ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

i)  ............................ 2.  .......................

14) தமிழ்க் கருத்தை எழுதுக.
Be Careful : ...........................................................................
I am eight : ...........................................................................

15) i) ஒயா கவது? என்பதன் தமிழ்க் கருத்தை எழுதுக
.................................................................................................

ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
தம்பி இருக்கிறார் .....................................................................................


(24புள்ளிகள்)

**புள்ளிக்கோட்டில் பொருத்தமான விடையை எழுதுக**

16) எண் பெயரை எழுதுக.
52 437 : .................................................................................

17) வெற்றிடங்களை நிரப்புக.
99 999 = ......................+ 9000 + 900+ ...........+ 9

18) 320 புத்தகங்களை ஒருவருக்கு 3 வீதம் எத்தனை பேருக்குப் பகிர்ந்து கொடுக்கலாம்? மீதி எத்தனை?
........................................... ...............................................

19.  உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.

20. சில நகரங்களுக்கிடையேயுள்ள தூரங்கள் பின்வரும் உருவிலே கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.

| | | | புத்தளம் |
|---|---|---|---|
| | | கொழும்பு | 142 |
| | காலி | 116 | 258 |
| மாத்தறை | 45 | 161 | |


மாத்தறையிலிருந்து காலி, கொழும்பினூடாகப் புத்தளத்துக்கு உள்ள தூரம் யாது?
.................................................................................................

21.மார்ச் மாதம் 28ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 12ஆம் திகதி வரையுள்ள நாள்கள் எத்தனை?
.................................................................................................

22. நீர்ப்பாத்திரமொன்றில் 20L நீர் உள்ளது. அதிலிருந்து 6 L 300 ml நீரை எடுத்துப் பயன்படுத்தினால் மீதியாக உள்ள நீர் எவ்வளவு?
.................................................................................................

23. மு.ப.6.55 இக்குப் பாடசாலைக்கு வந்த ராதா பாடசாலையிலிருந்து பி.ப. 2.20 இக்கு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.
i) அவள் பாடசாலையிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் எழுதுக. ..................................................................................
ii) ராதா பாடசாலையில் செலவிட்ட நேரம் யாது?
.................................................................................................


24) காட்டப்பட்டுள்ள செவ்வக உருவில் செங்கோணமுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

 ...........................................................................

25) விரித்து வைக்கப்பட்ட ஓர் அகராதியின் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 1099 ஆகும். அடுத்ததாக விரிக்கும்போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்களை முறையே எழுதுக.

1..................................................ii) ..............................................

26) நண்பிகள் மூவர் ஆளுக்கு ரூபாய் 300 வீதம் செலுத்திச் சேர்த்த பணத்தில் ரூபா 495 இக்குப் பழங்களை வாங்கி மீதிப்பணத்தைத் தம்மிடையே சமமாகப் பங்கிட்டனர்.
i) பழங்களை வாங்கிய பின்னர் எஞ்சியிருந்த பணம் யாது?
.................................................................................................
ii) மீதிப் பணத்தில் ஒருவருக்கு எவ்வளவு கிடைத்தது?
.................................................................................................

 27) இவ்வுருவுக்கு எத்தனை சோடி சமச்சீர் அச்சுக்கள் உள்ளன?

28) வெற்றிடங்களை சரியாக நிரப்புக.

| நாணயத்தாள் வகை | நாணயத்தாள்களின் எண்ணிக்கை | பணம், ரூபாய் சதம் |
|---|---|---|
| ரூபாய் 200.00 | 2 | ரூபாய் 400.00 |
| ரூபாய் 100.00 | ............ | ரூபாய் ........... |
| ரூபாய் 50.00 | ............ | ரூபாய் ............ |
| மொத்தம் | 10 | ரூபா 950.00 |

| | |
|---|---|
| 275 | 80 |
| 324 | 139 |

29) கட்டத்தினுள் உள்ள எண்களில் இரண்டு எண்களை எடுத்துக் கூட்டினால் 404 கிடைக்கும். அவ்விரு எண்களையும் தெரிவு செய்து எழுதுக.

.......................................................

(30 புள்ளிகள்)

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

30) இளஞ்சிவப்பு நிறத் தளிர்களை உருவாக்கும் தாவரம்
1. வேம்பு 2. மா 3. நாகமரம் 4. அரசு

31) ஒரு குறித்த காலத்தில் அன்றி வருடம் முழுவதும் பூக்கள் பூக்கும் தாவரம்
1. பலா 2. வாழை 3. அன்னமுன்னா 4. நம்புட்டான்

32) மண்ணை வளமாக்க உதவும் விலங்கு
1. அட்டை 2. மண்புழு 3. மட்டைத்தேள் 4. மரவட்டை

33) இலங்கைக்கே உரித்தான பறவை
1. மயில் 2. கிவி 3. சபன்கோழி 4. கழுகு

34) செயற்கை நிறப்பொருட்கள், சுவையூட்டிகள் ஆகியன சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக் கூடிய நோய்.
1. நீர்வெறுப்பு நோய் 2.நெருப்புக்காய்ச்சல் 3. நீரிழிவு 4. புற்றுநோய்.

35) பிரபல விஞ்ஞான புனைகதை எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவும் உலகிற்கே சேவையாற்றியவர்
1. ஆதர் சி.கிளாக் 2. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
3. சேர்.டி.பி. ஜயதிலக 4. கலாநிதி ரீ.பி.ஜாயா

36) காலாவதியான தகரத்தில் அடைத்த மீனை உண்பதால் ஏற்படக் கூடிய விளைவு.
1. உதடுகள் வீங்குதல்
2. உடலில் தடிப்புக்கள் தோன்றுதல், சொறிவு ஏற்படல்
3. சொறிவு ஏற்படல்
4. வயிற்றுவலி, வாந்தி

37) தேசப்படமொன்றில் அதிவேகப் பாதையைக் குறித்துக் காட்டப் பயன்படும் நியம நிறம் எது?
1. சிவப்பு 2. ஊதா 3. கறுப்பு 4. நீலம்

38) மத்தள சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள மாவட்டம், மாகாணம் முறையே
1. கொழும்பு, மேல்மாகாணம் 2. காலி, தென்மாகாணம்
3. யாழ்ப்பாணம், வடமாகாணம் 4. அம்பாந்தோட்டை, தென்மாகாணம்


39) சேனைப்பயிர்ச் செய்கையில் செய்கை பண்ணப்படும் பயிர்கள்
1. கத்தரி, தக்காளி, புடோல், பயிற்றை
2. குரக்கன், சோளம், இறுங்கு, கராமணிப் பயறு
3. பாகல், வெண்டி, கரட், பீற்றூட்
4. தென்னை, கமுகு, கித்தூள், பனை

40) முற்காலத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையில் பயிர்களின் பாதுகாப்புக்காக கையாண்ட பாரம்பரியமான உத்தி
1. கிருமிநாசினி தெளித்தல் 2. களைநாசினி தெளித்தல்
3. வேப்பங்கொட்டை திரவம் விசிறல் 4. தூவல் பாசணம்.

41. பின்வருவனவற்றுள் பயிர்ச் செய்கைக்குப் பாதகம் (தீங்கு) செய்யும் பிராணி
1. வெண்மூட்டைப்பூச்சி 2. மண்புழு 3. தேனீ 4. தும்பி

42) பின்வருவனவற்றுள் சமூகவிரோதச் செயற்பாடு யாது?
1. நிகழ்வுகளில் பங்குபற்றும் உரிமையளித்தல் 2. சிறுவரை வேலைக்கு அமர்த்துதல்
3. கல்வி கற்க வாய்ப்பளித்தல் 4. நன்னெறிக் கதைகளைக் கூறுதல்

43) இக்குறியீடு உணர்த்தும் கருத்து யாது?



1. வளைவான பாதை
2. இப்பக்கம் திரும்பவும்
3. மின்தாக்குதல் ஏற்பட இடமுண்டு
4. இடப்பக்கம் திரும்பவும்

44) முற்காலத்தில் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகக் கையாண்ட உத்திகளிலொன்று
1. பாரந்தூக்கி பயன்படுத்துதல்
2. பாரமான பொருளை கயிற்றினால் கட்டி இழுத்துச் செல்லல்
3. உழவு இயந்திரத்தின் மூலம் உழுதல்
4. மின்சோதிப்பான் பயன்படுத்துதல்

45) நுளம்பின் மூலம் பரவும் நோய் யாது?
1. சீதபேதி 2.சின்னமுத்து 3. மலேரியா 4. பிளேக்


46. உடலுக்குச் சக்தி தரும் உணவு
1. தோடம்பழம் 2. போஞ்சி 3. பருப்பு 4. சோறு

47) தரமான பொருள்களுக்கான உலக தரச் சான்றிதழ்
1. ISO 2. SLS 3. SLDA 4.SOS

48) நிலநடுக்கத்தின்போது ஒருவர் தன்னைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது
1. இருக்கும் இடத்திலேயே இருத்தல் 2. மரத்துக்கு கீழே இருத்தல்
3. உயரமான கட்டடத்துக்குச் செல்லல் 4. திறந்த வெளிக்குச் செல்லல்

49) ஒருவர் தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தும் உபகரணங்கள் எவை?
1. வானொலி, தொலைக்காட்சி 2. கதிரை, மேசை
3. அலுமாரி, கதிரை 4. சீப்பு, சவர்க்காரம்

50)




இவ்வுருவில் காணப்படுவது
1. ப வடிவக் காந்தம்
2. சட்டக்காந்தம்
3. குண்டுமுனை காந்தம்
4. பரிலாடக் காந்தம்

51) பின்வருவனவற்றுள் இலத்திரனியல் ஊடகம் எது?

1. 

2. 


3. 

4. 


52) இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?
1. இந்து 2. பசுபிக் 3. ஆட்டிக் 4. அத்திலாந்திக்

53) இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு
1. வடக்கே 2. தெற்கே 3. மேற்கே 4. கிழக்கே

54) மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று
1. கணினி 2. வானொலி 3. கட்டில் 4.நீர்

55) பின்வருவனவற்றுள் கடல்வழிப் போக்குவரத்துச் சாதனம் எது?
1. உலங்குவானூர்தி 2. வானொலி 3. ஓடம் 4. மகிழுந்து

56)




உரு A உரு B

இவ்வுருக்களின் ஒளிரும் தன்மை பற்றிய சரியான கூற்று எது?
1. உரு A யும் B யும் ஒளிரும் 2. உரு A ஒளிராது உரு B ஒளிரும்
3. உரு A ஒளிரும் உரு B ஒளிராது 4. உருக்கள் Aயும் Bயும் ஒளிராது

57) சமையல் பாத்திரங்களைப் பாவித்தபின் நன்றாகக் கழுவி உலரவிடுதல் வேண்டும். இதற்குரிய காரணமாக அமைவது.
1. கிருமிகள் ஈரலிப்பில் வளரக் கூடியவை 2. நீர் ஆவியாவதற்கு
3. பாத்திரம் நன்கு பளபளப்பாக இருக்க 4. பாத்திரத்தைச் சூடாக்குவதற்கு

58. உடல் பொலிவிழத்தலுக்குக் காரணம்
1. காபோவைதரேற்றுக் குறைபாடு 2. புரதக் குறைபாடு
3. கொழுப்புக் குறைபாடு 4. விற்றமின் C குறைபாடு

59) முலையூட்டிப் பிராணியொன்றினை இனங்காண்பதற்கான ஓர் இயல்பு எது?
1. தாவரப் பகுதிகளை மாத்திரம் உணவாக உட்கொள்ளல்
2. தாயானது குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்த்தல்
3. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல்
4. தரையில் மாத்திரம் காணப்படுதல் (30புள்ளிகள்)

60) **'மரங்களின் பயன்கள்'** எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.

1.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................

2.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................

3.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................

(6புள்ளிகள்)

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# தமிழ்த் தேசிய நீக்கம் செய்யப்படும் தமிழ் வாக்கு வங்கி?



நிலாந்தன்

சுமந்திரனின் பேட்டியில் அவர் ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக தெரிவித்த கருத்துக்களை கேட்டு உணர்ச்சிவசப் பட்டு சுமந்திரனை விமர்சித்த பலரும் பேட்டியின் ஓரிடத்தில் ஒரு முக்கியமான கேள்விக்குரிய முக் கியமான பதிலை உற்றுக் கவனிக்கத் தவறி விட் டதாகவே தெரிகிறது. நீங்கள் மறுபடியும் வெல்வீர் கள் என்று நம்புகிறீர்களா? என்று கேட்கப்பட்ட பொழுது சுமந்திரன் கூறுகிறார் ஆம் என்று. ஆணித்தரமாக அவர் அந்தப் பதிலைக் கூறுகி றார்.

எந்த துணிச்சலில் அவர் அந்த பதிலை கூறுகி றார்? கடந்த முறை வென்றதைப்போல இந்தமு றையும் வெல்லலாம் என்று அவர் நம்புகிறாரா? அல்லது கடந்த ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் தனது வெற்றியை உறுதிப்படுத்தும் விதத்தில் அவர் திட்டமிட்டு வேலை செய்திருக்கிறாரா?

இந்த கேள்விக்கான விடை மிகவும் முக்கியம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் சுமந் திரன் வெல்வதற்கான வாய்ப்புகள் சந்தேகத்துக்கு உரியது என்று நம்பப்பட்டது. எனினும் அவர் வென்றார். இம்முறையும் தான் வெல்வேன் என்று உறுதியாக நம்புகிறார். அந்த நம்பிக்கை எங்கிருந்து வருகிறது ? தமிழரசுக் கட்சிக்குள்ள பாரம்பரிய வாக்கு வங்கியின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையிலிருந்து வருகிறதா? அல்லது அவ ருடைய கடும் உழைப்பில் இருந்து வருகிறதா ? அல்லது தமிழ் வாக்காளர்கள் மத்தியில் மாற்றம் ஏற்பட்டுவருகிறது என்ற நம்பிக்கையிலிருந்து வருகிறதா?

சுமந்திரனை எதிர்க்கும் பலரும் இந்த விடயத்தை ஆழமாக ஆராய வேண்டும். கடந்த 11 ஆண்டுக ளாக தமிழ் வாக்காளர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய வாக்கு வங்கிக்கு வெளியே சிறு சிறு வாக்கு வங்கிகள் கட்டி எழுப்பப்பட்டு வருகின்றன. ஏற்க னவே தேவானந்தாவுக்கு ஒரு பலமான வாக்கு வங்கி இருந்தது. ஒரு நாடாளுமன்ற உறுப்பி னரை தெரிவு செய்யப் போதுமான அந்த வாக்கு வங்கி கடந்த 11 ஆண்டுகளில் தேய்ந்து வருக்கிறது. எனினும் இப்பொழுதும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தேர்ந் தெடுக்கத் தேவையான அளவுக்கு அது பலமாக இருப் பதாகவே தெரிகிறது. தேவானந்தாவுக்கு வெளியே விஜயகலா, அங்கஜன், பிள்ளையான் போன்றோருக் கும் வாக்கு வங்கிகள் வளர்ந்து வருகின்றன.

> சுமந்திரனின் நேர்காணலை ஒரு விவகாரமாக மாற்றும் விதத்தில் உரிய அழுத்தங்களைக் கொடுத்து தொகுத்து பிரசுரித்த தொலைக் காட்சி அங்கஜனின் உறவினரால் நடத்தப்படு வது. எனவே அதற்குப் பின் ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரல் உண்டு. ஆனால் இங்கு பிரச்சினை அதுவல்ல. சுமந்திரனை போலவே அங்கஜ னும் நம்புகிறார் தனக்கு ஒரு வாக்கு வங்கியை விருத்தி செய்யலாம் என்று. விஜயகலா நம்புகி றார் தனக்கு ஒரு வாக்கு வங்கி உண்டு என்று.



சுமந்திரனின் நேர்காணலை ஒரு விவகாரமாக மாற்றும் விதத்தில் உரிய அழுத்தங்களைக் கொடுத்து தொகுத்து பிரசுரித்த தொலைக்காட்சி அங்கஜனின் உறவினரால் நடத்தப்படுவது. எனவே அதற்குப்பின் ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரல் உண்டு. ஆனால் இங்கு பிரச்சினை அது வல்ல. சுமந்திரனைப் போலவே அங்கஜனும் நம்புகிறார் தனக்கு ஒரு வாக்கு வங்கியை விருத்தி செய்யலாம் என்று. விஜயகலா நம்புகிறார் தனக்கு ஒரு வாக்கு வங்கி உண்டு என்று. கிளிநொச்சியில் சந்திரகுமாரும் அவ் வாறு நம்புகிறார்.

கடந்த 11 ஆண்டுகளில் தமிழ்த் தேசிய பரப்புக்கு வெளியே தேசிய நோக்குநிலை அற்ற அல்லது அதற்கு எதிரான சிறு சிறு வாக்கு வங்கிகள் தமிழ் வாக்காளர்கள் மத்தியில் வளர்ச்சியுற்று வருகின்றன. இவை வெற் றிடத்தில் இருந்து வரவில்லை. தங்களை தமிழ்த் தேசியவாதிகளாக காட்டிக்கொள் ளும் அரசியல்வாதிகள் விட்ட வெற்றிடமே இந்த தமிழ்த் தேசிய நீக்கம் செய்யப்பட்ட வாக்கு வங்கிகளின் அல்லது தமிழ்தேசிய எதிர் வாக்கு வங்கிகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகும். அதாவது கடந்த 11 ஆண்டுகளாக தமிழ்த் தேசியவாதிகள் பொருத்தமான அரசியல் தரிசனங்க ளோடு வாக்காளர்களை அணிதிரட்டத் தவறிய ஒரு வெற்றிடத்தில் இப்படிப்பட்ட வாக்கு வங்கிகள் உற்பத்தியாகி பலம டைந்து வருகின்றன. தமிழ் மக்கள் மத்தி யில் இருக்கக்கூடிய வறுமை, அறியாமை, சாதி, ஏற்றத்தாழ்வுகள், சமூக ஏற்றத்தாழ் வுகள், மத முரண்பாடுகள் போன்றவற்றை சமயோசிதமாக கையாண்டு இந்த வாக்கு வங்கிகள் விருத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு கருத்து ரீதியாகவும் நடைமுறை அனுபவ ரீதியாகவும் தமிழ்த் தேசிய வாக்கு வங்கியில் இருந்து உடைந்து போகும் வாக்காளர் களைக் கவர்ந்திழுப்பதற்கு இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் பலமான அரசியல்வாதிகள் வந்துவிட்டார்கள்.

சுமந்திரனும் அவர்களில் ஒருவர்தான். ஆனால் அவர் தமிழ்த் தேசியக் கொடியின் கீழ் அதைச் செய்கிறார் என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. சுமந்திரனின் தொடக்க கால வாக்கா ளர்கள் பெருமளவுக்கு தமிழ்த் தேசிய தன்மை மிக்க வர்கள். கூட்டமைப்பின் வாக்கு வங்கிதான் அது. கூட்டமைப்பின் பேரால் தான் சுமந்திரன் வாக்கு கேட்டார். எனவே அந்த வாக்கு வங்கியின் அடித் தளம் தமிழ்தேசிய ஆதரவு தளம் தான்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டமைப் பின் உயர்மட்டக் கூட்டத்தில் கதைத்த சம்பந் தர் சுமந்திரனின் சர்ச்சைக்குரிய பேட்டி வெளியான பின்னர் தன்னுடனும் பலர் பேசி யதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பேட்டி கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் தாக்கத் தைச் செலுத்துமெனப் பரவலாகத் தனக்கு தெரிவிக் கப்பட்டதாகவும் கூறியிருக்கிறார்.

எனினும் தன்னுடைய சர்ச்சைக்குரிய பேட்டியும் உட்பட தான் தொடர்ச்சியாக தெரிவித்து வரும் கருத்துக்கள் தனது வாக்கு வங்கியை பலவீனப்படுத்தலாம் என் பதை நன்கு தெரிந்திருந்தும் சுமந்திரன் எந்தத் துணிச் சலில் அவ்வாறு கதைத்தும் செயற்பட்டும் வருகிறார் ? விடை மிக எளிமையானது. தமிழ்த் தேசிய நீரோட்டத் துக்கு வெளியே ஒரு வாக்கு வங்கி தனக்கு உண்டு என்று அவர் வலிமையாக நம்புகிறார். அங்கஜனும் டக்ளஸ் தேவானந்தாவும் விஜயகலாவும் சந்திரகுமா ரும் நம்புவதைப் போல சுமந்திரனும் நம்புகிறார். தனது வெளிப்படையான கருத்துக்களை கேட்ட பின் னரும் தன்னுடைய ஆதரவாளர்கள் யாரும் தனக்கு எதிராக திரும்பப் போவதில்லை என்று அவர் நம்புகி றார். அப்படி நம்பும் அளவுக்கு அவர் வேலை செய்கி றார். தனது வாக்கு வங்கியை கடந்த பத்தாண்டுகளில் தான் எப்படித் திட்டமிட்டுக் கட்டி எழுப்பினார் என்பது சுமந்திரனுக்கு தெரியும். அதன் பலன் தனக்கு கிடைக் கும் என்று அவர் நம்புகிறாரா?

இந்த இடத்தில் ஓர் ஆகப் பிந்திய உதாரணத்தை சுட் டிக்காட்ட வேண்டும். வட மாகாணசபையில் முக்கிய பொறுப்பை வகித்த ஒரு அரசியல்வாதி என்னிடம் சொன்னார்...கொவிட் 19 ற்காக நிவாரணப் பொருட் களை வழங்கிய பொழுது பழக நேர்ந்த சில நபர்கள் தெரிவித்த அரசியல் கருத்துக்கள் தமிழ்த்தேசிய எதிர் நோக்கு நிலையை கொண்டவைகளாக காணப்பட்டன என்று. தமிழ்த் தேசிய நீக்கம் செய்யப்பட்ட ஒரு தொகுதி வாக்காளர்கள் திரண்டு வருகிறார்கள் என்று. தமிழ்த் தேசிய நோக்கு நிலைக்கு எதிராக மிக இயல்பாக ஒரு வாக்கு வங்கி வளர்ச்சியுற்று வருகிறது. வரலாறு தெரி யாமல் அல்லது திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றை நம் பியோ அல்லது தமிழ்த் தேசியவாதிகளாக தெரியும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களின் நடவடிக் கைகளில் விரக்தியடைந்து ஒரு தொகுதி வாக்காளர்கள் சுமந்திரனைப் போன்றவர்களின் பின் போகிறார்கள். இது ஓர் இயல்பான வளர்ச்சி போல நடந்து வருகிறது. சுமந்திரனைக் குறைகூறும் பலரும் இவ்வாறு தென் னிலங்கை கட்சிகளுக்கும் சுமந்திரனைப் போன்றவர் களுக்கும் எப்படி வாக்குகள் திரளுகின்றன என்பதைக் குறித்து ஆழமாக ஆராய வேண்டும்.

தமிழ்த்தேசியக் கொடியின் கீழ் அதற்கு எதிரான ஒரு வாக்கு வங்கியை சுமந்திரன் மட்டும் கட்டியெழுப்ப வில்லை. சுமந்திரனின் பேட்டியை நியாயப்படுத்திய சம்பந்தனின் தலைமையின் கீழ் கட்சிக்குள் வேறு சிலரும் அவ்வாறான நிலைப்பாட்டோடு காணப்படுகி றார்கள். ஆனாலவர்கள் சுமந்திரனைப் போல வெளிப் படையாகக் கதைப்பதில்லை. அதாவது தமிழ்த் தேசியக் கொடியின் கீழ் தமிழ் தேசிய நீக்கம் செய்யப்பட்ட ஒரு வாக்கு வங்கி வளர்க்கப்படுகிறது.

சுமந்திரன் ஒரு தனிமனிதர் அல்ல அவருக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியி லும் ஆதரவாளர்கள் உண்டு. மாகாணசபை

## தமிழ்த் தேசிய நீக்கம் செய்யப்படும்

(தொடர்ச்சி)

மட்டத்திலும் ஆட்கள் உண்டு. அவர் வட மாகாண சபைக்குள் ஒரு பலமான அணியை வைத்திருந்தார். உள்ளூராட்சி சபை மட்டத்திலும் அவருக்கு விசுவாசிகள் கூட்டம் ஒன்று உண்டு. தவிர அரசு அலுவலர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் மத்தியிலும் அவருக்கு வேலை செய்பவர்கள் உண்டு. முகநூலில் அவருக்காக பிரசாரம் செய்பவர்களைப் பார்த்தால் அது தெரியும். ஒரு அணியாக அவர்கள் இயங்கி வருகிறார்கள். சட்டவாளர் தவராசாவை தேசியப் பட்டியலின் மூலம் உள்வாங்குவதற்கு தடையாக இருப்பது சுமந்திரன் என்று கூறி கட்சிக்குள் ஒருபகுதியினர் அவருக்கு எதிராகக் காணப்படுகிறார்கள். அவருடைய அரசியல் நிலைப்பாட்டுக்கு கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு பலப்பட்டு வருகிறது. எனினும் இவை எல்லாவற்றையும் தாண்டி அவர் தனக்கென்று மிகப் பலமான ஆதரவுத் தளம் ஒன்றைக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறார். அதற்கு கட்சித் தலைமையின் ஆசீர்வாதமும் உண்டு.

சுமந்திரனின் ஆதரவாளர்கள் யார் யார் என்று பார்த்தால் அவர்கள் அனைவரும் பிறகு ஒரு காலம் சுமந்திரன் தங்களை நல்ல நிலைக்கு உயர்த்துவார் என்று நம்புவோராகக் காணப்படுகிறார்கள். எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற கனவுடன் காணப்படும் பலரும் அவ்வாறு நம்புகிறார்கள். ஊடகத்துறைக்குள்ளும் கல்விச் சமூகத்துக்குள்ளும் அரசு அலுவலர்கள் மத்தியிலும் இவ்வாறாக எதிர்காலத்தில் சுமந்திரன் தங்களுக்கு உரிய பதவிகளைத் தருவார் என்று நம்பிக் காத்திருக்கும் ஒரு தொகை வளர்ந்து வருகிறது.

சுமந்திரனை நம்பினால் வாக்குறுதி அளிக்கப்பட்ட பதவிகளை அவர் தமக்கு வழங்குவார், அவர் வாக்குறுதி அளித்த வெற்றியை தமக்கு எப்படியாவது பெற்றுத் தருவார் என்று நம்பும் ஒரு தொகுதி படித்தவர்கள் இப்பொழுது கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியில் காணப்படுகிறார்கள். யாழ் மாநகர சபையில் ஆர்னோல்ட்டை சுமந்திரன் எப்படி வெல்ல வைத்தார் என்ற முன்னுதாரணம் அவர்களைக் கவர்ந்திழுக்கிறது. அரசியலில் ஈடுபட விரும்புகின்ற அல்லது ஏற்கனவே அரசியலில் ஈடுபட்டு அடுத்தடுத்த நிலைப் பதவி உயர்வுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற கூட்டமைப்பு ஆதரவாளர்கள் பலர் மத்தியிலும் சுமந்திரனை விசுவாசித்தால் தாம் கனவுகாணும் பதவிகள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கைக்கு ஆர்னோல்ட் ஓர் முன்னுதாரணமாக காணப்படுகிறார்.

எனவே சுமந்திரனை விமர்சிப்பவர்களும் சம்பந்தரை விமர்சிப்பவர்களும் ஒரு விடயத்தை தெளிவாக உணர வேண்டும். தமிழ்த் தேசியக் கொடியின் கீழேயே அதற்கு எதிரான அல்லது தேசிய நீக்கம் செய்யப்பட்ட வாக்கு வங்கி ஒன்று வளர்ந்து வருகிறது. தமிழ் தேசிய வாக்கு வங்கிக்கு வெளியே தென்னலங்கை மையக் கட்சிகளுக்கு வாக்கு வங்கிகள் வளர்ந்து வருகின்றன. இந்த வாக்கு வங்கிகளை உடைக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்துக்கும் உண்டு அதை எப்படி உடைக்கலாம்?

ஒரே ஒரு வழிதான் உண்டு வாக்களிப்பு அலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அந்தப் பேரலைக்குள் சிறிய சிறிய வாக்கு வங்கிகள் கரைந்து போய்விடும். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது எப்படி சிறிய சிறிய வாக்கு வங்கிகள் கரைந்தனவோ அப்படித்தான். எனவே ஒரு தேசிய வாக்களிப்பு அலையை உற்பத்தி செய்தால் மட்டும்தான் மேற்சொன்ன தமிழ்த் தேசிய அலைக்கு எதிரான சுமந்திரனைப் போன்றவர்களின் வாக்கு வங்கிகளை உடைக்கலாம். அதற்கு ஒரே ஒரு முன்நிபந்தனை தான் உண்டு. கூட்டமைப்பை விடப் பலமான ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பினால் மட்டும்தான் தமிழ்த் தேசிய வாக்களிப்பு அலையொன்று தோன்றும். இல்லையென்றால் வாக்குகள் சிதறும். அப்படிச் சிதறும் வாக்குகளை அங்கஜன் அள்ளிச் செல்வார். விஜயகலா அள்ளிச் செல்வார். சுமந்திரனும் அள்ளிச் செல்வார். வடை போச்சே... !

# தீர்ப்பு வந்ததும் விரைவில் தேர்தல்!

### பிரதமர் மஹிந்த திட்டவட்டம்

கொழும்பு, மே 31

நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்பு கூடிய விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என நம்புகின்றோம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று சனிக்கிழமை கண்டி தலதாமாளிகைக்கு ஆன்மீக பயணம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தேர்தலை நடத்துவதற்காகவே தேர்தல் ஆணைக்குழு இருக்கின்றது. பொதுத்தேர்தலை நடத்துவதற்கு அந்த ஆணைக்குழு தயாராக வேண்டும். தேர்தலை நடத்த வேண்டும் என்பது ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்டவர்களின் கடமை மற்றும் பொறுப்பாகும். தேர்தல் என்பது கட்டாயம் நடத்தப்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னர் அதனைச் செய்வார்கள் என நினைக்கின்றோம். ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக எதிரணியே தேர்தலைக் கோரவேண்டும். நாம் எதிரணியில் இருக்கும்போது இதனையே செய்தோம். ஆனால், தற்போது எதிரணி தேர்தலுக்கு அஞ்சுகின்றது. அதனை ஒத்தி வைக்க முயற்சிக்கின்றது.

எனவே களநிலைவரம் என்ன வென்பது மக்களுக்கு தற்போதே புரிந்துவிட்டது. அதேவேளை, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஓரிருவரை கைதுசெய்ததுடன் அந்தப் பணி நிறைவுபெற வில்லை. பின்னணி ஆராயப்படுகின்றது. சந்தேகநபர்களைத் தேடிச்சென்று கைது செய்கிறோம்-என்றார். (எ-44)

## யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கியில் கடந்த சில வாரங்களாக தேவையான அளவு குருதி கிடைக்கவில்லை என்று மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். இதனால் குருதி கொடையாளர்கள் அனைவரும் குருதித்தானம் செய்வதற்கு முன்வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வழமையாக நடைபெறுகின்ற குருதிக்கொடை முகாம்கள் தற்போதைய சூழ்நிலை காரணமாக குறைவடைந்துள்ளன. ஆகவே குருதிக் கொடையாளர்கள் மருத்துவமனை குருதி வங்கியை தொடர்புகொண்டு குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

மேலும் 0212223063, 0772105375 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு குருதிகளை வழங்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு பல்வேறு அமைப்புகளால் நடத்தப்படவிருந்த இரத்ததான நிகழ்வுகளுக்கு, கொரோனாவைக் காரணம் காட்டி வடக்கு மாகாணத்தில் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ 20,111)

## கொரோனா தொற்றாளர் அதிகரித்தால் நெருக்கடி

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, மே 31

இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்படுகின்றவர்கள் 2 ஆயிரம், 3 ஆயிரம் என்ற எண்ணிக்கையை கடந்தால் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் பெரும் நெருக்கடி நிலை ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதி பொதுச் செயலாளரான மருத்துவர் நவீன் டி சொய்ஸா தெரிவித்தார்.

குவைத் நாட்டிலிருந்து வந்த பலருக்குத் தொற்று ஏற்பட்டிருக்கின்ற நிலையில், அங்கிருந்து இன்னும் பலர் நாடு திரும்பி வருகின்றனர். தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாவோர் கொத்துக் கொத்தாக அதிகரிக்க ஆரம்பித்திருப்பதால், இரண்டாம் கட்ட அலை வீசுமோ என்கிற அச்சமும் ஏற்பட்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## ஆயுதப்...

வில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்ட சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை, சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது.

ஆயுதப் போராட்டம் தொடர்பில் சுமந்திரன் சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணல் சர்ச்சை தொடர்பிலும் கூட்டத்தில் பேசப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆயுதப் போராட்டத்தை எதிர்க்கவில்லை. அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம், ஆயுதப் போராட்டம் தோற்பதற்கு விட வேண்டாம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கோரியது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ,5)

## முல்லைத்தீவில்...

றைய தினம் 61 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட 8 பேர், மன்னார் பொது மருத்துவமனையில் ஒருவர், முல்லைத்தீவில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையைத்தைச் சேர்ந்த 52 பேரின் மாதிரிகள் நேற்றுச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த இருவருக்கு சோதனையின்போது தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஒ,5)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2020 இல் வெளியிடப்பெற்றது.